## பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி – 2017

---

பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 5 ஆம் இலக்க பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி அதிகாரச்சட்டத்தின் 21(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பதவிநிலைக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யும் போது அச்சொத்துக்கள் உரித்தாகும் ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வகுப்பு முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் வாகனங்கள், தளபாட உபகரணங்கள் கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள் போன்ற சில சொத்துக்கள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. மேலும் நியமத்தின் 43 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தொழிற்தகைமையுடய மதிப்பீட்டாளர் ஒருவரினால் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 90 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செயற்படுத்தப்பட வேண்டிய திகதி, மதிப்பீடு தொடர்பான தகவல்கள், சொத்துக்களின் முகப்புப் பெறுமதி மதிப்பீடு செய்யும் போது பின்பற்றப்பட்ட நடைமுறைகளும் முக்கியமான எடுகோள்களும் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 1,321,756 தொகையான நிறுத்தி வைத்தல் தொகை இக்கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக கட்டிடக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட காரணத்தினால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுத்தி வைத்த கணக்கிலும் கட்டிட கணக்கின் கிரயம் அப் பெறுமதியாலும் கட்டிட பெறுமானத்தேய்வு ரூபா 26,435 ஆலும் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன. மேலும், மீள அறவிடப்பட்ட நிறுத்தி வைத்தல் தொகையான ரூபா 96,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்லூரியின் நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்வு கணக்கு வைத்தல் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் ரூபா 23,640,000 இற்குரிய பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவாக ரூபா 4,728,000 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்களின் தேறிய பெறுமதி மற்றும் மூலதன மானியங்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமானத்தேய்வு செய்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த கணனி மற்றும் உபகரணங்களுக்குரிய நடப்பாண்டின் போது ரூபா 1,758,068 தொகை மேலும் பெறுமானத்தேய்வாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் மூலதன மானியங்கள் மற்றும் சொத்துக்களின் பெறுமதி அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(iii) 2016 ஆம் ஆண்டின் போது எரிபொருள் மானிக்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 1,528,912 தொகை இயந்திர பெறுமானத்தேய்வு ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக ரூபா 872,150 வரவு வைக்கப்பட்ட காரணத்தினால் இயந்திர பெறுமானத்தேய்வு ஒதுக்கக் கணக்கின் மீதி ரூபா 2,401,062 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) 2013 ஆம் ஆண்டின் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 265,000 பெறுமதியான உழவு இயந்திர டேலருக்கு நடப்பாண்டிற்குரிய ரூபா 53,000 பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) 2016 ஆம் ஆண்டில் கல்லூரி நிதியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நூலகப் புத்தகங்களுக்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 464,762 தொகை மீளாய்வாண்டின் காலக்கழிவாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் பற்றாக்குறை மற்றும் மூலதன மானியக் கணக்கின் மீதிகள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) கல்லூரியின் சொத்துக்கள் மற்றும் பாவனையை பொருட்கள் இருப்பு கணக்கு வைத்தல் தொடர்பாக கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த குறைபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) ரூபா 836,421 பெறுமதியான தலையணை உறைகள், மெத்தை விரிப்புக்கள், மேசை விரிப்பு போன்ற மூலதனத் தன்மையல்லாத 09 பொருட்கள் செலவினமாக பதிவழிப்பதற்கு பதிவாக இயந்திரம் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 192,444 பெறுமதியான கணனி கதிரைகள், மேசைகள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் தளபாடங்கள் கணக்கு ரூபா 192,444 குறைத்தும் இயந்திர கணக்கு ரூபா 192,442 கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பெறுமானத்தேய்வு ரூபா 14,433 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) நடப்பாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறியியல் சேவைகள் ரெஜிமன்ட் களஞ்சியத்தில் காணப்பட்ட பெறுமதி ரூபா 7,594,126 தொகையான 5 வகைகளுக்குரிய 22,118 இருப்பு விடயங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.3 போதியளவு அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

2013 ஆம் ஆண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் கல்லூரியின் உள்ளக வீதி முறைமையை புனரமைப்பு செய்யும் போது அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தத்துடன் இணைந்ததாக ரூபா 6,198,670 பெறுமதியான வீதியின் ஒரு பகுதி அமைச்சு செயலாளரின் அங்கீகாரமொன்று இல்லாமல் புனரமைப்பு செய்யப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 3,374,169 தொகை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.4 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

கல்லூரிக்கு எரிபொருள் வழங்கியமைக்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை தரைப்படைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 10,992,853 ஆன கடன் மீதி 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு சபையொன்று நியமிக்கப்பட்டு பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டு முதல் 2014 காலப்பகுதிக்குரிய ரூபா 294,199 ஆக நிறுத்தி வைத்தல் தொகை தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வவாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பதவிநிலைக் கல்லூரியின் நிதி விளைவுகள் ரூபா 4,667,249 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் ரூபா 5,665,356 பற்றாக்குறை ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 998,106 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 25,606,868 ஆல் அதிகரித்திருந்த போதிலும் வருமானம் ரூபா 26,604,974 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டு தவிர 2012 ஆம் ஆண்டு முதல் 2017 வரையான காலப்பகுதியில் நிதி விளைவுகளில் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்ந்தும் தளம்பலடைந்து காணப்பட்டன. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொண்டதன் பின்னர் கல்லூரியின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டில் ரூபா 21,327,028 ஆக இருந்ததுடன், அப்பெறுமதி 2017 ஆம் ஆண்டு வரையில் ரூபா 42,198,472 வரை படிப்படியாக அதிகரித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கல்லூரியின் நடைமுறை விகிதம் 0.27 முதல் 0.1 வரை குறைவடைந்திருந்தமை காரணமாக பலவீனமான தொழிற்படு மூலதன முகாமையொன்று காணப்படுவது அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது தொலைநோக்கு ஒன்றுடன் உரிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இலக்கிடப்பட்ட செயற்பாடுகள் உட்பட நிறுவனத்தின் அமைப்பு வரைபடம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனர் மற்றும் தற்போதுள்ள பதவியணயினர் தொடர்பான விபரங்கள், வருடாந்த செயற்பாடுகளுக்கான நிதி ஏற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம், உள்ளக கணக்காய்வுத் திட்டம் போன்ற விடயங்கள் உட்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டில் பதவி நிலை கல்லூரியினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலதனச் செலவினம் மற்றும் நிலையான சொத்துக்கள் என்பவற்றை கையேற்பதற்காக எதிர்பார்க்கப்பட்ட செலவினம் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

#### 4.1.2 தொழிற்பாட்டு மீளாய்வு

2008 இன் 5 ஆம் இலக்க பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தரைப்படை உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள், பதவி உயர்வுகளுக்காக அவர்களுக்குத் தேவையான தொழில்துறை அறிவினை வழங்குதல் மற்றும் கல்லூரியில் பயிற்சி பெறும் உத்தியோகத்தர்களின் கட்டளை மற்றும் பதவிநிலை செயற்பாடு ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களில் ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்காக தயார்படுத்தல் கல்லூரியின் அடிப்படை நோக்கங்களாகும். மீளாய்வாண்டின் போது கல்லூரியினால் நடாத்தப்பட்டிருந்த பட்டப்படிப்பு பாடநெறிகளை 128 மாணவர்கள் பூர்த்தி செய்திருந்ததுடன் ஒரு மாணவருக்காக ரூபா 1,129,923 கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

2015 யூலை 10 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான சிதைவடைந்த மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத வாகனங்களை இச்சுற்றறிக்கை திகதியிலிருந்து3 மாதங்களுக்குள் கைதவிர்க்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் கல்லூரிக்குச் சொந்தமான இரண்டு மோட்டார் சைக்கில்கள் மற்றும் பௌசர் இலுவை வண்டி என்பன இரண்டு வருடங்களுக்கு

மேற்பட்ட காலத்திலிருந்தும் டிரக் வண்டியொன்று ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் கல்லூரி வளவில் சிதைவடைந்து காணப்பட்ட போதிலும் சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

2011 ஆம் ஆண்டின் போது கல்லூரிக்கு கையளிக்கப்பட்டிருந்த இளைஞர் சேவை மன்றத்திற்குரிய ஹெயியன்துடுவ பிரதேசத்தில் உள்ள 11 ஏக்கர் அளவிலான காணி மற்றும் கல்லூரியின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற பாதுகாப்பு அமைச்சிற்குரிய ரூபா 2,100,000 மீள் மதிப்பீட்டு பெறுமதியான பஸ் வண்டி மற்றும் தரைப் படையினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 19,610,000 கிரயமான ஏனைய 12 வாகனங்கள் என்பவற்றை பதவிநிலைக் கல்லூரிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பதவியணியினர் முகாமைத்துவம்

2012 இன் 13 ஆம் இலக்க அரச பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 22(2) ஆம் பிரிவின் பிரகாரம் கல்லூரியின் கணக்காளர் பதவிக்காக இலங்கை கணக்காளர் சேவையின் உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டில் வெற்றிடமாக இருந்த அப்பதவிக்கு இவ்வறிக்கை திகதி வரையிலும் அச்சேவையின் உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பதவிநிலைக் கல்லூரியின் செயற்திறனான செயற்பாட்டிற்காக தேவையான பேராசிரியர் பதவி, விரிவுரையாளர் பதவி மற்றும் ஏனைய பதவிகள் ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அப் பதவிகளுக்காக நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பொருளாதார, சமூக, சுற்றாடல் போன்ற வெவ்வேறு துறைகளில் வெவ்வேறு நிலைகளில் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்குரிய அங்கத்தவர் நாடுகள் 2030 ஆம் ஆண்டளவில் ஒரே நிலைக்கு கொண்டுவரும் நோக்கில் 17 நோக்கங்களும் அந்த நோக்கங்களை நோக்கி பயணிப்பதற்காக 169 இலக்குகளும் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளன. 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்திச் சட்டம் 2017 ஒக்தோபர் 30 ஆந் திகதி நிறைவேற்றப்பட்டு சுற்றறிக்கை மூலம் சகல அரச நிறுவனங்களும் அறிவுட்டப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் பதவிநிலைக் கல்லூரி அது தொடர்பாக அறிந்து கொண்டு நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு தேவையான இலக்குகளை இனங்கண்டிருந்த போதிலும் அந்த இலக்குகுளை அளவிடுவதற்காக சுட்டிகள் இணங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு 2018 மார்ச் 29 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6.2 உள்ளகக் கணக்காய்வு

கல்லூரியின் உள்ளகக் கணக்காய்வுப் நடவடிக்கைகளுக்காக நிரந்தர உள்ளகக் கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்படாமை காரணமாக முறையான உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6.3 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடு

### 6.3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1(உ) பிரகாரம் பிரதான பெறுகை திட்டம் அறு மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியில் அன்றாடம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். எனினும், திட்டத்திற்கு உட்படாத ரூபா 40,156,332 ஆன பெறுகை நடவடிக்கைகள் நடப்பாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பெறுகை நடவடிக்கைகள் நடப்பாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பெறுகைத் திட்டம் இதன் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்லூரிக்கு சூரிய சக்தி முறைமையொன்றை பொருத்துவதற்காக ரூபா 4,970,000 ஆன ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்த தனியார் நிறுவனமொன்றிடமிருந்த அதற்குரிய விதப்புரைகளை பெற்றுக் கொண்டிருந்தது உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை காரணமாக உரிய பெறுகை செயற்பாட்டின் வெளிப்படையான தன்மை வரையறுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், அரசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.13 ஆம் பிரிவிற்கு முரணாக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரால் காசோலையொன்றின் மூலம் கேள்விப் பாதுகாப்பு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது கல்லூரியால் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் நினைவுச் சின்னங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,088,475 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி குறித்த பொருட்கள் பதவிநிலைக் கல்லூரிக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்குரிய கட்டளை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி அதாவது பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு 26 நாட்களின் பின்னர் வழங்கப்பட்டிருந்த காரணத்தினால் குறித்த கொள்வனவுச் செயற்பாடு வெளிப்படையானது அல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் மேலதிகம் 28 இன் 2.14.1 பிரிவின் பிரகாரம் 8 மில்லியனுக்கு மேற்பட்ட ஒப்பந்தம் அமைச்சின் கொள்வனவு குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் இதற்கு முரணாக ரூபா 46,938,698 தொகையான இணையத்தள தொலைபேசி முறைமை ஸ்தாபிக்கும் பெறுகை, பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.4 ஆம் பிரிவிற்கு முரணாக மூன்று பகுதிகளாக வேறாக்கப்பட்டு ஒரே ஒப்பந்தகாரருக்கு வழங்குவதற்கு திணைக்கள பெறுகை குழுவின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது பதவிநிலைக் கல்லூரியின் படைப்பிரிவின் நிறைவேற்றுனரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) பெறுகை செயற்பாடு | பொருட் கொள்வனவு தொடர்பாக பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) கணக்கீடு | சொத்துக்கள் சரியாக இணங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |